3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *மொத்தம், பரம்பிக்குளம், ஆழியாறு திட்ட அணைகளினுடைய மொத்த நீர், 30,456 மில்லியன் கன அடி (குறுக்கீடு) அந்த நீரின் உபயோகமான நீர் 22,500 மில்லியன் கன அடி (குறுக்கீடு) இன்றைய நீர் இருப்பு 5,672 மில்லியன் கன அடி. நாம் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டியது சோலையாறு அணையிலிருந்து 1,383 மில்லியன் கன அடி. (குறுக்கீடு)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *பேச அனுமதிக்காததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *மணக்கடவிலிருந்து நாம் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டியது 441 மில்லியன் கன அடி. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நீங்கள் எல்லாம் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *ஆக மொத்தம் கேரளாவிற்கு நாம் கொடுக்க வேண்டியது 1,824 மில்லியன் கன அடி.*

ஆக இன்றைய நீர் இருப்பு 3,848 மில்லியன் கன அடி. தற்போது அணையினுடைய நீர் இருப்பினை கவனத்தில் எடுத்துக்கொண்டு, திருமூர்த்தி அணையில் இருந்து இரண்டு நனைப்பிற்காக, ஒரு நனைப்பிற்கு நாளொன்றுக்கு 1,520 கன அடி வீதம் 16 நாட்களுக்கும், தேவைப்படும்போது தொடர்ந்து 16 நாட்களுக்கும் ஆக மொத்தம் 3,040 மில்லியன் கன அடி. முதல் மண்டலம் ஆழியாறு அணையிலிருந்து பொள்ளாச்சி வாய்க்கால், வேட்டைக்காரன் புதூர் வாய்க்கால், ஆழியார் ஊற்றுக் கால்வாய், சேத்துமடை வாய்க்கால் இரண்டு நனைப்பிற்காக தினமும் 400 மி. கன அடி வீதம்—800 மில்லியன் கன அடி வீதம் 32 நாட்களுக்கும் ஆக

மொத்தம் 3,840 மில்லியன் கனஅடி தேவைப்படுகிறது. அதில் நீர் சேதாரம் 384 மில்லியன் கன அடி. ஆக மொத்தம் 4,224 மில்லியன் கன அடி இன்றைய நிலவரப்படி தேவைப்படுகிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்து 200 கன அடி என கொண்டால் எதிர்பார்க்கும் நீர் வரத்து 1,032 மில்லியன் கன அடி ஆகும். இன்றைய இருப்பு 3,848 மில்லியன் கன அடி. நவம்பர், டிசம்பர் மாதங்களில் எதிர்பார்க்கப்படும். நீரின் வரத்து 1,032 கன அடியாக இருந்தால் 4,880 மில்லியன் கன அடி வந்து சேருகின்றது. இந்த இரண்டு மண்டலங்களுக்கும் அதாவது, பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின்கீழ், இரண்டு மண்டலங்கலுக்கும் சேர்த்து மொத்தமாக 4,224 மில்லியன் கன அடி தேவைபபடுகிறது. ஆகவே இன்றைய நீர் இருப்பின் அளவை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, முழுப் பயிர் காலத்திற்கும் நீர்விட போதுமானதாக இல்லை. எனினும், தற்போது இருப்பில் உள்ள நீர் அளவைக் கவனத்தில் கொண்டும், மற்ற விவசாயிகளின் கோரிக்கையின்படியும், சிறப்பு நனைப்பாக முதலில் 16 நாட்களுக்கும், பிறகு தேவைப்படும்போது, இரண்டாம் நனைப்பாக 16 நாட்களுக்கும், ஆக மொத்தம் 32 நாட்களுக்கு தண்ணீர் வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதன்பின் வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்து அணையின் நீர் இருப்பு அதிகமாகும்போது, தொடர்ந்து பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவது குறித்து ஆராய்ந்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன். அவரை திரு. எஸ்.ஆர்.பி. அழைத்துச் சென்றுவிட்ட காரணத்தால் போய்விட்டார்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 179 முதல் 187 வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.